காலம் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக ஆட்சி செய்து ஒரு முன்மாதிரியான முதல்வர் என்ற பெயருக்கு ஆளாகி இருக்கின்றார்கள். இதை நம்முடைய முதல்வர் அவர்களே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அரசியல் கட்சிகளின் சார்பாக, எங்களுடைய கட்சியிலும்கூட அவருடைய பிறந்த நாள் விழாவுக்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்யவிருக்கிறோம் என்றாலும்கூட, அந்தப் பெரியவருக்கு, பெருந்தலைவருக்கு இந்த அரசின் சார்பாக, உலகமே வியக்கின்ற அளவுக்கு ஒரு சிறப்பான நூற்றாண்டு விழா ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், முதல்வருடைய தலைமையிலேயே அதைச் செய்ய வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை விடுத்து, பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி சொல்லி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(3-4-2002)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் *1-42* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*70. 1983*ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் *23-11-2001* ஆம் நாளிட்ட *250* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1937* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *10/1937*) *54 (3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

71. 1-5-1981 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் *1-5-1981* ஆம் நாளிட்ட II(1)/PE/239 (d)/*81* ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது மற்றும் *1981* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் *2-1-2002* ஆம் நாளிட்ட *1* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [*1937* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *10/1937*) *54(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

2002 ஏப்ரல் 2]

72. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம்ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

73. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

74. 2000-2001 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

75. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

50. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS